# தெய்வீக வாழ்வு

பிரம்மஶ்ரீ நா. சோமாஸ்கந்த குருக்கள்
சிங்கப்பூர்

உலகில் தோன்றும் மக்கள் சிலகாலம் வாழ்ந்து, மறைந்துவிடும் தன்மை கொண்டோராவர். அவர்கள் வாழும் வகையிலிருந்தே உலகத்தோரால் மனிதராகவும் தெய்வமாகவும் மதிக்கப்படுகின்றனர். உலக இன்பங்களை அனுபவித்தாலும் அதில் மனத்தைப் பறி கொடுக்காமல் தெய்வ சிந்தனையுடன் வாழ்வது மிகவும் அரிய உயரிய வாழ்வாகும்.

நமது முன்னோர்கள் - அன்றாடம் அதிகாலையில் நித்திரைவிட்டெழுவது முதலாக இரவு மீண்டும் படுக்கைக்குச் செல்லும் வரையுள்ள சகல காரியங்களையும் இன்ன வகையிற் செய்தல் வேண்டும் என விதித்திருக்கின்றனர். "இப்படிச் செய்தல் தகாது", "இப்படித்தான் செய்தல் வேண்டும்" என்று வரையறுத்துக் கூறப்பட்டவற்றை ஆராய்ந்து பார்த்தோமெனில் - அவையனைத்தும் ஆரோக்கியத்திற்கும் செல்வத்திற்கும் -அமைதிக்கும் ஒற்றுமைக்கும் அன்புக்கும் இறுதியில் எல்லையில்லாத இன்பத்திற்குமே ஏற்றவையாக இருப்பதை அறியலாம். ஆலய வழிபாடு தினமும் செய்தல் வேண்டுமென்பதும் அவர்களது அறிவுரையாகும். ஔவைப் பாட்டியும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனவும் கூறியுள்ளார். எனினும் வாழ்க்கைப் பிரச்னைகள் பலவற்றுக்கும் மத்தியில் உழலும் மனிதனுக்கு மன அமைதிக்காகச் சில நிமிடமாவது நியதியாகத் தினமும் வழிபாடாற்றுவது மிகவும் அரிதாகும். ஆயினும் ஆலயத்திற்குச் சென்று சில நிமிட நேரமாவது சிந்தனைகளைச் சிதறவிடாது மனத்தை ஒரு நிலைப்படுத்தித் தியானம், அர்ச்சனை -தோத்திரம் ஆகியவற்றில் ஈடுபடுத்தினால் அன்று முழுவதுமே மனத்தில் நிம்மதியும் சந்தோஷமும் அமைதியும் நிலைத்திருப்பதை அனுபவத்தில் அனைவரும் அறிவோம். இதனால் ஆலயத்துள் பிரவேசிப்பது முதலாக அங்கிருந்து திரும்புவது வரையில் நாம் அறிந்து அனுட்டிக்க வேண்டிய சில கருத்துகளை இப்போது தொகுத்துத் தருகின்றோம்.

**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்**

கோவிலுக்கு வெகு தூரத்திலிருந்து நோக்கும் போதே நமது மனத்தில் தெய்வ சிந்தனையை உண்டு பண்ணுவது கோபுரத்தின் திருத்தோற்றமாம். இதனால் இதைத் தூலலிங்கம் எனக் கூறுவர். இதன் அமைப்பு எரியும் சுடர் போன்று உள்ளதை அறிவீர்கள். இறைவனின் திருவருள் வடிவமும் இவ்வண்ணம் என்று தான் அருளாளர்கள் கூறியுள்ளனர்.

"சோதியே! சுடரே! சூழொளி விளக்கே!" எனவும், "தூண்டு சுடர் அனைய சோதி" என்றும் "கற்பனை கடந்த சோதி" எனவும் "பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பு" என்றும் திருமுறைகள், புராணங்கள் இறைவனைப் போற்றியுள்ளன. மணிவாசகப் பெருமான் சிவபுராணத்தில், சிவனை "ஓங்கி -ஆழ்ந்து -அகன்ற -நுண்ணியனே" என வர்ணித்துள்ளார். எனவே கோபுரத்தை இந்த மாதிரியான அமைப்பில் உருவாக்கினார். இதன் நாற்புறங்களிலும் பிரம்மா, விட்டுணு, உருத்திரன், மகேஸ்வரன் ஆகிய மூர்த்திகளின் பலவகைத் தோற்றங்கள் அமைக்கப்பட்டிருப்பது ஒரே பரம்பொருள்தான் பல்வேறு தோற்றங்களைத் தாங்கி ஐந்தொழில்களையும் நடாத்துமெனத் தெளிவதற்கேயாகும். சதாசிவ வடிவத்தின் ஐந்து திருமுகங்களும் சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் எனப் பெயர்பெற்று முறையே, பிரம்ம, விட்டுணு, உருத்திர, மகேச, சதாசிவ மூர்த்திகளாக விளங்குகின்றன. இவை ஆற்றும் ஐந்து தொழில்களும் பின்வருமாறு சிவாகமங்களில் கூறப்படுவதைக் காண்க:

"சத்தியோஜாஞ் சிருஷ்டி ரூபம் -
ஸ்திதிர் வாம முகம் பவேத்,
சம்ஹாரம் தட்சிணம் வக்த்ரம் -
திரோ பாவஞ்ச பூர்வகம்
அனுக்கிரஹஞ்ச ஊர்த்வ வக்த்ரம்".

இக்கோபுரங்கள் முத்தத்துவங்களின் வடிவில் மூன்றுபடி நிலையுள்ளவையாகவும் பஞ்சகலை வடிவுளதாக ஐந்து நிலையுள்ளவையாகவும் இன்னும் ஏழு -ஒன்பது நிலைகளைக் கொண்டவையாகவும் வெவ்வேறு தத்துவ அடிப்படையில் இடம், பொருள், காலம் இவற்றுக் கேற்ப அமைக்கப்படுகின்றன.

இப்பிரபஞ்சம் முழுவதுமே இதனுள் அடக்கம் என நாம் சிந்தித்து வழிபடுவதற்காகவே உலகில் நடைபெறும் லீலா வினோதங்கள் பலவற்றைச் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் சித்திரித்துள்ளனர். உபானம் முதலான வரி வர்க்கங்களில் மந்திரங்கள், பதங்கள் வர்ணங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள் ஆகிய யாவும் கற்பிக்கப்படுகின்றன. இதைத் தரிசிப்பது கோடி புண்ணியமாகும்.

கோபுர தரிசனத்தை முடித்தபின் கால் கைகளைச் சுத்தப்படுத்திக்கொண்டு ஆசாரத்துடன் உள்ளே புகுதல் வேண்டும்.

**மலைபோல ஒரு மாடு**

திருநாளைப் போவார் திருச்சரிதையில் - திருப்புன்கூர்த் தலத்தை அடைந்து வெளியில் நின்று தரிசனம் செய்ய முனைந்தபோது கோபுரத்து

மண்டபத்தில் உள்ள பெரிய நந்தி மறைத்திருப்பதைப் பார்த்து -"மலைபோல ஒரு மாடு படுத்திருக்கிறதே" எனப் பாடினார். உடனே அந்த மாபெரும் நந்தி இறைவனருளால் விலகியது என அறிகிறோம். அந்த நந்தித் தேவருக்கு "அதிகார நந்தி" எனப் பெயர். நமது கோவில்களில் இடவசதியின்மையால் அமைக்கப்படுவதில்லை. ஆயினும் நாம் மனத்தினால் அவரைச் சிந்தித்து வழிபட்டு, சுவாமி தரிசனம் செய்வதற்கு அவரது அனுமதியைப் பெற்று உட்செல்லுதல் வேண்டும். உள்ளே சென்றதும் கொடிமரத்திற்கு இப்பால் பூமியிலே வீழ்ந்து வணங்குதல் வேண்டும். அங்குள்ள பலிபீடத்தில் நமது காமம், குரோதம், மதம் முதலானவற்றை அர்ப்பணம் செய்து பரிசுத்த ஆன்மாவாகிய நந்தியைப்போல் நாமும் தூய்மையும் பக்தியும் உள்ளவர்களாகி வழிபடுதல் வேண்டும். கொடிமரத்தின் அமைப்பினை நோக்கின் -அது சோதிவடிவான இறைவனை உணர்த்துவதாய் இருப்பதை அறியலாம். அதனடியில் மூலாதாரத்து அதிபதியாகிய கணபதி சிறிதாக, மறைவாக அமர்ந்திருப்பார். பாச நீக்கம் பெற்றுவிட்டால் ஆன்மா பதியைச் சென்றடைந்து பரமானந்தத்தை அனுபவிக்கும் என்பதனைக் காண்பிப்பதற்கே -பலி பீடம், நந்தி முதலியன முறையே அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் கோவிலின் அமைப்பு கோபுரத்திலிருந்து கர்ப்பக் கிரகம் வரையும் நோக்கின் படுத்திருக்கும் ஒரு மனிதனின் உடலமைப்பின் பிரகாரம் இருப்பதை உணரலாம். கோபுரம் பாதங்கள் - கர்ப்பக் கிரகம் சிரசாகும். மேலும் கொடிமரம் விமானம் ஆகியன கீழே சமாதியில் உட்கார்ந்திருக்கும் ஒரு ஞானியின் வடிவில் அமைந்திருக்கின்றன. மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களும் கீழிருந்து படிப்படியாக விளங்குகின்றன. எனவே, இருவிதமான அமைப்புக்களும் திருவருளால் ஞானத்தில் நாம் கீழிருந்து மேல் நிலைக்கு உயர்த்தப்பட்டு நற்கதியடைய முடியும் என்பதனையும் ஏக காலத்தில் தெரியவைக்கின்றன. பாசங்களிலிருந்து விடுபட்ட ஆன்மாவானது படிப்படியாக ஆணவ முனைப்பு குன்றக்குன்ற ஞானவடிவமாக மாற்றமடையும் என்பதனை விளக்குவதற்காக, வெளியிலிருந்து எல்லா மண்டபங்களிலும் தனித்தனி ஒவ்வொரு நந்தி அமைக்கப்பெற்றிருப்பதனாலும் அவை ஒவ்வொன்றும் படிப்படியாக உருவத்தில் சிறிது சிறிதாக இருப்பதனாலும் ஆழ்ந்து சிந்திக்கக் கூடியதாக உள்ளது. (இங்குள்ள சிறு கோவில்களில் எல்லா மண்டபங்களிலும் தனித்தனி நந்தி இருப்பதில்லை. இடவசதியின்மையே இதற்கு முக்கியக் காரணமாகும்.) இதே போன்று பாசநீக்கம் பெற்ற ஆன்மா கொடிமரமாகிய பதியுடன் சென்று சேர்வதனைக் கொடிமரம் விளக்குகின்றது. கொடிமரம் பதி. கொடிச்சீலையில் எழுதப்பெற்ற நந்தி. (இறைவனது படைக்கலமாகிய திருவருட் சக்தியைத் தனது முதுகில் தாங்கி நிற்பதனால்) சத்திநிபாதம் பெற்ற ஆன்மா. தருப்பைக் கயிறு பாசம். எனவே இருவகையான நிலையிலும் முப்பொருள் விளக்கத்தை நமக்கு நல்கி நிற்பதை அறியலாம். கொடிமரத்தினடியில் மூலாதார ஸ்தானத்தில் நான்கு இதழ்களுடன் கூடிய தாமரைப் புஷ்பத்தில் மூலாதாரக் கணபதி வீற்றிருப்பார். மூலவர் எந்த மூர்த்தியாக இருப்பினும் மூலாதார ஸ்தானத்தில் விநாயகரே காணப்படுவார்.

"வ, ச, ஷ, - தனயுக்தே சம்யசாதார பத்மே
தருண மருண சாத்ரம் வாரணாஸ்யம் கணேசம்
அபய வரத ஹஸ்தம் சாருபாசாங்கு சோத்யத்
கரயுகள மனக்யம் சிந்தயேத் விக்னராஜம்"

என, ஆகம தியானம் விளம்புகின்றது. இதனைப் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் -

மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு
மாமலர் நாலினும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தி னுள்ளே
ஓமென விநாயகன் உலாவி நின்றானே

என்று திருமூல தேவர் கூறுகின்றார்.

ஆகவே இவற்றை நன்கு சிந்தித்து கொடிமரத்துக்கு இப்பால் கீழே வீழ்ந்து வணங்குதல் வேண்டும். அங்ஙனம் வணங்கும்போது காமம், வெகுளி, மயக்கம் ஆகியவை நம்மைவிட்டு நீங்குவதற்காக, பலிபீடத்திலே இவற்றை நாம் பலியிட்டுப் பரிசுத்தமான ஆன்மாவாகிய நந்தியைப்போல் ஆகவேண்டுமெனச் சிந்தித்து வணங்கல் வேண்டும். கீழே வீழ்ந்து வணங்கும் நமஸ்காரம் ஆண்களுக்கு அட்டாங்க நமஸ்காரமெனவும், பெண்களுக்குப் பஞ்சாங்க நமஸ்காரம் எனவும் இருவகைப்படும்.

பூமியில் பதியும் வண்ணம் வணங்கல் -(ஆண்களும் பெண்களும் செய்யக்கூடிய பொதுவான நமஸ்காரம் கைகள் இரண்டையும் கூப்பித் தலையைச் சாய்த்து அதனுடன் சேர்த்து மூன்று அங்கங்களினாலும் வணங்குவது திரியங்க நமஸ்காரமாகும்.) (உச்சியின்மீது இருகரங்களையும் உயர்த்தி வணங்குதல் ஆண்களுக்கு மட்டுமே உரிய வணக்கமாகும்.)

விநாயகர் முதல் சண்டேஸ்வரர் ஈறாக உள்ள மூர்த்திகளை முறைப்படி ஒவ்வொரு சன்னிதானத்தின் முன்னரும் சிறிது நேரம் மன அடக்கத்துடன் நின்று அந்தந்தச் சுவாமிக்கு ஏற்ற தோத்திரங்களில் ஏதாவது ஒன்றைக் கூறி வணங்குதல் வேண்டும். வணங்கும்போது அந்த மூர்த்தியின் திருத்தோற்றத்தை நன்கு பார்த்துச் சிரசு முதல் பாதம் வரை அத்திருவுருவை அவதானித்துத் தத்துவார்த்தங்களை மனத்தில்

சிந்தித்து வழிபடுதல் வேண்டும். அங்ஙனம் இல்லாவிடில் நாம் கண்களை மூடித் தியானத்தில் ஈடுபடும் நேரத்தில் மூர்த்தியின் திருத்தோற்றத்தை நமது மனக்கண்களால் காணுவதற்கு இயலாது போய்விடும். ஆகவே கண்களை நாம் பெற்றதின் பயன் இறைவனின் அழகிய திருத்தோற்றத்தினையும் அபிஷேக ஆராதனைகளையும் திருவுலாவரும் அலங்காரக் காட்சியினையும் கண்டு ஆனந்தம் அடைய வேண்டுமென்பதை உணர்தல் அவசியம்.

**விநாயகர்**

விநாயகப் பெருமானையே நாம் முதலில் வணங்குதல் வேண்டும். மூலமும் முழுதும் முடிவுமாக விளங்கும் பிரணவ வடிவினராக விநாயகப் பெருமான் விளங்குவதனால் இவரின் வழிபாடு முதன்மை பெற்றது. அ + உ + ம் ஆகிய (A-U-M) மூவெழுத்துக்களின் நாதங்கள் ஒருங்கு இணையும்போது 'ஓம்' என்னும் ஒலி பிறக்கின்றது. நாதவடிவில் இறைவன் நமக்குக் காட்சி தருவதற்கே பிரணவமாகிய ஓம் என்னும் எழுத்தைப் போன்ற யானையின் முகத்தைத் தமது திருவதனமாகக் கொண்டு விநாயகர் விளங்குகின்றார். விநாயகனை முதலில் வணங்கினால், நாம் ஆரம்பிக்கும் எக்காரியமும் எவ்வித இடையூறும் இன்றி நிறைவேறும் எனவும் அல்லாவிடில் விக்கினங்கள் சம்பவிக்கும் எனவும் நமக்குக் கந்தபுராணம் அறிவுரை பகருகிறது.

விநாயக வழிபாடு செய்யாவிடின் தீமை விளையும் என்பதைச் சிவபெருமான் திரிபுரதகனம் செய்ய முற்பட்டபோது தேர் அச்சு முறிந்ததினால் நமக்கு உணர வைக்கின்றனர். இதனை, "முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறை ரதம் அச்சது பொடிசெய்த அதிதீரா" என அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார். விநாயகரை வழிபாடு செய்யும்போது, இரு கைகளையும் முட்டியாகப் பிடித்து இரு கபாலங்களிலும் குட்டிக் கும்பிடுதல் வேண்டும். இதனால் சிரவிலுள்ள அமிர்தமானது சகல நாடிகளிலும் கலந்து உடம்பு முழுவதும் அமிர்தமயமாக மாறிவிடுமெனக் கூறப்படுகின்றது. வலது கை முட்டியினால் தலையின் வலது பக்கத்திலும் இடக்கை முட்டியினால் இடது பக்கத்திலும் குட்டிக் கும்பிடுதலே முறையாகும்.

மேலும் வலது கையினால் இடக் காதினையும் இடது கையினால் வலக் காதினையும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்து எழுந்து (கணைக்காலில் தொடைபடும் வண்ணம்) வணங்கல் வேண்டும். இதனைத் "தோப்புக்கரணம்" எனக் கூறுவர். கயமுகன் என்னும் அசுரன் தேவர்களைக் கொண்டு இங்ஙனம் தன்னை வழிபடும்படி கூறிக் கொடுமைப்படுத்தினான். விநாயகப் பெருமான் அவனைச் சம்காரம் செய்து தேவர்களைக் காத்தருளினார். அன்றுமுதல் தேவர்கள் விநாகப் பெருமானைத் தோப்புக் கரணம் செய்து வழிபடுவராயினர்.

கருணையின் திருவடிவாகவும் ஞானத்தின் இருப்பிடமாகவும் விநாயகரை நாம் சிந்தித்து வழிபடுதல் வேண்டும். மூஷிக வாகனத்தைக் கொண்டுள்ளதின் நோக்கம் - அற்பப்பிராணியாயினும், பெருத்த உருவத்தினையுடைய தம்மைச் சுமக்கும் வண்ணம் மிக லேசாகத் தம்மை உணரவைத்தலேயாகும். இதிலிருந்து பலவகைப் பிறவிகளின் வெளித் தோற்றம் மாறுபாடாக இருப்பினும் உயிர் ஒரே தன்மையானதெனவும், அவ்வுயிரில் பரம்பொருளாகிய இறைவன் கலந்து உறைகின்றான் என்பதும் நமக்குத் தெரிகின்றது. விநாயக வணக்கத்தினை முடித்துக் கொண்டு சிவபெருமான் திருச்சந்நிதியின் முன்னர் செல்லுதல் முறையாகும்.

**சிவன்**

சிவபெருமானே சைவசமயிகளின் முழு முதற்கடவுளாவார். சிவபெருமான் உலகம் முழுவதும் நிறைந்தும் உலகத்தோரின் மனம், வாக்கு முதலியவற்றைக் கடந்தும் நித்தியராய் விளங்குபவர். எனவே உலகம் முழுவதும் வியாபித்துள்ள சிவனை அவரைப் பேராற்றல் கருதி ஆணாகவும், பெருங்கருணை கருதிப் பெண்ணாகவும் ஒரே சமயத்தில் ஞானிகள் தமது உணர்விலே கண்டார்கள். அந்தத் திருக்கோலத்தையே அர்த்த நாரீஸ்வர வடிவாகவும் சிவலிங்கத் திருமேனியாகவும் நமக்கு வர்ணித்தார்கள். சிவம், சக்தி, ஆகிய இரண்டும் பிரிக்க முடியாத சம்பந்தமுடையவை. சிவம் - சக்தியின் மூலம் இயங்கி ஐந்து தொழில்களையும் நிகழ வைக்கின்றது. சிவசக்தி ஐக்கியத்தினை -சி என்னும் பதமே நமக்குப் புரிய வைக்கின்றது. சி என்பது சிவம். வ என்பது சக்தி. சிவம் உறுதியாக இருப்ப, சக்தி இயக்கம் கொண்டு விளங்குகின்றது. இதனை உமாபதி சிவாச்சாரியார் ''பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும் கூசாமற் காட்டக் கொடி'' என்று கொடிக்கவி என்னும் நூலிற் குறிப்பிடுகின்றார். பேசா எழுத்து என்றால் அசையாது. நிர்விகல்பமாக விளங்கும் சி என்னும் இறைவன். பேசும் எழுத்து என்றால் இயங்கும் தன்மை கொண்ட வ என்னும் திருவருளாகிய சக்தி.

இதை உணர்த்தவே, சிவக்குறியாக உள்ள சிவலிங்கத்தினையும் ஆண், பெண், அடையாளத்தின் தோற்றத்தில் அமைத்துள்ளனர். சிவலிங்கத்தின் கீழுள்ள வட்டமான பகுதி ஆவுடையாள் எனப்படும். இது இயக்க சக்தியாகிய திருவருள் மயமானது. உலகம் முழுவதும் தன்னுள் அடக்கி விளங்குவது. இதனுள்ளே பாதியும் மேலே தெரியும் வண்ணம் பாதியுமாக உள்ளது லிங்கம் என்னும் பகுதியாகும். இது அசைவின்றி என்றும் உள்ள பொருளாகிய சிவம் ஆகும். உலக வடிவாக உள்ள ஆவுடையாளில் அமிழ்ந்தும் அதனைக் கடந்து மேற்பட்டும் இருப்பதனாலே (கட + உள்) கடவுள் என்று அழைக்கின்றோம். இன்றைய விஞ்ஞானிகள் கண்டுள்ள முடிவுகளின்படியும் உலகத்தின் எல்லாப் பொருள்களையும் துகள்களாக்கி மேலும் நுண்துகள்களாக்கி ஆராய்ந்து பார்க்கினும் உள்ளே ஒவ்வொரு நுண்துகளிலும் இரு பொருள்கள் காணப்படுகின்றன என்றும் ஒன்று அசைவற்றதும் மற்றது அசைவு உள்ளது எனவும் (எலெக்ட்ரோன் நியூட்ரோன்) கூறுகின்றனர். இதனை நமது மெய்ஞ்ஞானிகள் எப்போதோ கண்டு கூறியிருப்பதை அவரறியார்.

**அம்மன்**

சிவலிங்க தரிசனத்தை முடித்துக்கொண்டு நடராஜர் முதலிய மூர்த்திகளைத் தரிசித்துக்கொண்டு அம்பிகையைத் தரிசித்தல் வேண்டும். இறைவன் வேறு அன்னை வேறு என

நாம் எண்ணுதல் தகாது. யாவராலும் கண்டுணர முடியாத இறைவன் அருள் திருமேனி தாங்கி நமக்கு உருவமாகத் தோற்றமளிக்கும்போது கருணை வடிவான தாயாகிய அம்பிகை வடிவிலே நாம் கற்பிக்கின்றோம்.

''அப்பன் நீ அம்மை நீ'' ''அம்மையே, அப்பா'' போன்ற திருமுறைத் தொடர்கள் இதனை வலியுறுத்துகின்றன. இறைவன் எல்லா வஸ்துக்களையும் உயிர்களையும் கோவிலாகக் கொண்டு அதனுள்ளுறை தெய்வமாகத்தானே விளங்குகின்றான். எனவே எல்லா வடிவங்களும், படிமங்களும், அவனுக்குக் கோவிலாகும். ஆயினும் திருவருள் வடிவாகிய சக்தியின் வடிவமே அவனுக்குச் சிறப்பான கோவிலாகும். இதனைத் ''தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை'' என்னும் தொடரின் ஆக்கமான தத்துவக் கருத்து இயம்பி நிற்கிறது. நாம் அன்னையின் கருணையினாலே தான் ஆண்டவனை உணர முடியும் என்பதனாலும் ஆண்டவன் நம்மை நோக்கிக் கீழிறங்கி வரும்போது அன்னை வடிவிலேதான் வருவான் என்பதனாலும் நம்மை மிகவும் அணுகி விளங்குவது ஆண்டவனின் அருட்சக்தியே என அறியலாம். இதனாற்றான் ''நமப் பார்வதீபதயே'' என வரும் தொடரில் பார்வதியை முதலில் கூறிப் பதியையுணரவைக்கின்றனர். அன்னையை வணங்கி அருள் பெறுவோமாக.

### சுப்பிரமணிய சுவாமி

இதன்பின் முருகப்பெருமான் திருச் சந்நிதியை அடைந்து வணங்குதல் வேண்டும். என்றும் இளையனாய் அழகனாய் ஆண் மயிலை வாகனமாய்க் கொண்டு தேவலோக, பூலோக மாதர்களாகிய இரு தேவிமார்களைக்கொண்டு, திருக்கரத்திலே வேற்படைக் கலத்தைத் தாங்கிய வண்ணம் முருகன் காட்சி தருகின்றான். அவனது கொடியிலுள்ள சேவல் அவனது பெரும்புகழை யாவரும் அறியும் வண்ணம் உரத்துக் கூவிச் சொல்லுகின்றது. இத்தகைய கந்தக் கடவுளை வணங்கும்போது -தோகைமயில் ஆகிய பிரணவத்தில்

உட்பொருளாக ஞானப்பழமாகிய முருகப் பிரான் வீற்றிருப்பதாக நாம் சிந்திக்க வேண்டும். இரு சக்திகளில் தெய்வநாயகியைத் தேவர்கள் அழைத்துச் சென்று முருகனிடம் சேர்த்தார்கள். வள்ளி நாயகியைத் தேடித்தானே வலிய வந்து, வேடர்களை வென்று தன்னோடு சேர்த்துக்கொண்டான். இதனைக் கந்தபுராணம் கூறுகின்றது. சிவ ஆன்மாக்கள் ஞானத்தினாலே முருகனை அடைவது உண்டு. பல அஞ்ஞானத்தினாலே அறியாதிருப்பினும், கருணை மேலீட்டினாலே ஞானப்பழமாகி முருகன்தோனே வந்து தடுத்தாட்கொண்டருளுவதும் உண்டு என்பதனை நாம் நினைவுகூர்தல் வேண்டும்.
வள்ளியை இச்சாசக்தியெனவும் தெய்வானையைக் கிரியாசக்தி எனவும் வேற்படைக் கலத்தை ஞானசக்தியெனவும் வர்ணிப்பார்கள். ஆணவம் மேலிட்ட நிலையிலிருந்த சூரபத்மனை அவனது தவத்தின் மேம்பாட்டினாலே, முருகன் தானே வந்து ஞானாஸ்திரமாகிய வேலாயுதத்தின் மூலம் அவனது அஞ்ஞானத்தைப் போக்கித் தன்னைத் தாங்கும் வாகனமாகவும் தன் புகழ்பாடும் கொடியாகவும் நிலைபெறச் செய்து தன்னோடு சேர்த்து யாவரும் போற்றி வழிபடச் செய்துள்ளான். ''சேவலும் மயிலும் போற்றி, திருக்கைவேல் போற்றி, போற்றி'' என்பதனாலறியலாம். முருகப் பெருமானின் வேல் மகிமை அளவிடற்கரியது என்பதனால் ''போற்றி போற்றி'' என இருமுறை கூறினார்.

மேலும்:-
வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்,
வாரிகுளித்தவேல்
கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
தொளைத்தவேல் உண்டேதுணை.
எனவும் கூறப்பட்டிருப்பதனால் வேற்படைக் கலத்தின் மகிமையை நன்குணரலாம்.

### வைரவ சுவாமி

முருகப் பெருமானைத் தரிசித்த பின்பு, வைரவப் பெருமானைத் தரிசித்தல் முறையாகும். வைரவப் பெருமானைத் தரிசிக்கும்பொழுது நான்கு வேதங்களின் முதல்வனாக இவரைச் சிந்தித்தல் வேண்டும். நாய் வாகனம் வேதவடிவாக விளங்குகின்றது. வைரவர் சூலமானது முப்பெரும் சக்திகளையும் குறிப்பிட்டு, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் ஆற்றுபவர் இவரே என்று பறைசாற்றுகின்றது. 'மூவிலை இருதாட் சூலமேந்துதல் மூவரும் யாமென மொழிந்தவாறே'' என வரும் புராணத்தினாலும் இதனையுணரலாம். கபாலம் ஏந்தியிருப்து ஆணவமுனைப்பைத் தாமே குறைத்து நம்மிடமிருந்து அஞ்ஞானத்தை ஏற்றுக்கொள்பவர் என்பதைனைக் குறிக்கின்றது. பலி என்பது பிச்சை எனப் பொருள்படும். இரத்தத்தைப் பிச்சையாக ஏற்பவர் என்பதனால் ''இரத்தபலிபிரியர்'' எனக் கூறப்பட்டுள்ளதனைத் தவறாகப் புரிந்துகொண்டு ஏராளமாக உயிர்க்கொலை புரிவதில் மக்கள் சிரத்தைகொண்டு விளங்கினர். இரத்த மிடுக்கினால் நாம் அடாத காரியங்கள் செய்வதனையும் இரத்தங்குன்றியபோது அமைதியாக வலுவிழந்து நிற்பதனையும் அனுபவத்தினாலேயே அறிவோம். மேலும் பலகோடி பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்களின் மண்டை ஓடுகளைத் தாம் தரித்திருப்பது தனது நிலையான தன்மையினையும் நமக்கு உணரச் செய்கின்றது. மண்டையோட்டு மாலையை நினைவு கூர்வதற்கே வடைமாலை அணிவிக்கின்றோம். இவற்றைச் சிந்தித்தால் நாமும் கர்வம் இன்றிப் பணிவு மிகுந்தவர்களாக மாறி நற்கதியடையலாம் என்பது துணிபு.

### நாகேஸ்வர (நாகதம்பிரான்) சுவாமி

நாகதம்பிரான் சந்நிதிக்கு வந்தவுடன் அங்கு ஐந்துதலை நாகப்பாம்பு பெரிய உருவத்துடன் காட்சி தருகின்றது. சிறிய சிவலிங்கம் உள்ளே

காணப்படுகின்றது. லிங்கத்திலும் பார்க்கப் பாம்பின் தோற்றம் அமைக்கப்பட்டிருப்பது நமக்கு ஓர் உண்மையை விளக்குகின்றது. உலகம் முழுவதிலும் அடங்கியும் ஆதாரங்களனைத்தையும் கடந்தும் இறைவனது பேரருட் சக்தி விளங்கும் என்பதைக் காட்டவே லிங்கத்தின் மேல் ஐந்து தலை நாகம் கவிந்திருப்பது உணர வைக்கின்றது. மூலாதாரத்திலிருந்து கிளம்பும் மூச்சுக் காற்றானது இடை, பிங்கலை ஆகிய இரு நாடிகளையும் யோக சாதனை மூலம் கட்டுப்படுத்தும்போது மிகவும் வேகத்துடன் சுழுமுனையாகிய நடு நாடிமூலம் மேற் கிளம்புகின்றது. அப்போது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களையும் கடந்து இறுதியில் சிரசின் மூலம் வெளிக்கிளம்பித் துவாத சாந்தம் என்னும், (துரியம் -துரியதீயம் என்னும்) பரமண்டலத்தையடையும்போது உள்ள பெருநிலையை இந்த நாகம் புலப்படுத்துகின்றது. யோகத்தின் மூலம் உணரப்படும் உட்பொருள் சிவம் என்பதனை லிங்கம் உணர்த்துகின்றது. சில இடங்களில் நாகத்தில் விஷ்ணு காணப்படுவார். எப்படியிருப்பினும் தத்துவக் கருத்து ஒன்றேயாம். ''காளிங்க நிருத்தம்'' என்னும் தோற்றத்தில் - கிருஷ்ணபகவான் பாம்பின்மீது நின்று அதன் வாலையும் கையில் பிடித்திருப்பது மூலமும் முடிவும் நானே என்பதனைப் புலப்படுத்துவதாகும். இவரை வணங்கியபின் சண்டேசுவரரைத் தரிசிப்போம்.

### சண்டேசுவரர்

இறைவன்மேல், இடையறாத பக்தி செலுத்தியதின்மூலம் விசார சருமர் என்பவருக்கு இறைவன் சண்டேசபதம் என்னும் பதமுத்திப் பேற்றினைக் கொடுத்தருளினார். இறைவனுடன் எக்காலமும் அவரையே தரிசித்துக்கொண்டு தியானத்தில் இருப்பவர். இறைவன் தனக்குப் படைக்கப்படும் திருவமுது மற்றும் பரிவட்டங்கள் ஆகிய அனைத்தும் உனக்கே உரியவை என்று கூறியருளினார். அதனால்தான் இறைவனுக்கு நிவேதனமாகும் அனைத்தும் சண்டேசுவரருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. மேலும் ''பக்தர்கள் எம்மைப் பூசித்த பலனை நீயே அவர்களுக்கு வரமாக வழங்குவாயாக'' என்று இறைவன் கட்டளையிட்டருளினார். ஆகவே நாம் இறுதியில் சண்டேஸ்வரப் பெருமானைத் தரிசித்து அவர் அருளைப் பெறுகின்றோம். இவர் கண்களை மூடி சிவ சிந்தனையில் தியானித்திருப்பதனால்தான் மெதுவாக மும்முறை கையைத்தட்டி அவரது கிருபாநோக்கம் எம்மீது செலுத்தப்படவேண்டும் என்று தியானிக்கிறோம். பலமாகக் கை தட்டுதலோ, அவரது திருவுருவத்தைத் தூக்கியபடியே வேகமாக ஓடிச் செல்வதோ மகா பாபத்தைத் தருவதாகும். மேலும் சண்டேசுவரருக்கும் மூலமூர்த்திக்கும் இடையே குறுக்காகச் செல்லுதல் தகாது. ஆகவே மூலமூர்த்தியை வலம் வரும்போது இவரையும் சேர்த்து நாம் வலம் செய்வதனால், இவரைத் தனியாக வலம் செய்தல் ஆகாது. மூலமூர்த்தியை வலம் செய்யும்போது பரிவார மூர்த்திகளை வலம் வருதல் அவசியமில்லை. சிரசின்மீது கைகளைக் குவித்து அல்லது மார்பின் நேரில் குவித்து வணங்கிக்கொண்டு இறைவனது துதிகளை அல்லது திருநாமத்தினை உச்சரித்துக்கொண்டு மெதுவாக அடிமேலடி வைத்து வேறு எங்கும் கவனம் செலுத்தாது இடையில் வேறுவார்த்தைகளைப் பேசாது வலம் வருதல் முறையாகும்.

### தியானம்

அர்ச்சனை வழிபாடுகளை இயன்றளவு செய்ததின் பின்பு இறுதியாக ஆலய வழிபாட்டின் முக்கியமான பெரும் பயன் யாதெனில் நாம் ஓர் இடத்தில் அமர்ந்து அமைதியாக இருந்து கண்களை மூடிக் கொண்டு மனத்தை அடக்கி வெளியே நாம் இதுவரை கண்டுகளித்த இறைவனது அழகிய திருக்கோலத்தினையும் பூஜை ஆராதனைகளையும் மனத்தில் மீண்டும் சிந்தித்துத் தியானத்தில் அமர்ந்திருத்தலாகும். வழிபாட்டினால் பெறும்பயன் நாம் தியானத்தில் ஈடுபடுதலேயாகும். இதுவே தவம் எனப்படும்.

அருணகிரிநாதர் -

''சரணகம லாலயத்தை,<br>
அரை நிமிட நேரமட்டில்<br>
தவமுறை தியானம் வைக்க<br>
அறியாத சடகசட மூடமட்டி''

என்று தம்மைப் பற்றித் தாழ்த்திப் பாடுகிறார். எனவே நாம் ஒவ்வொருவரும் பூஜையைத் தரிசித்தபின் உடனே வீண் வார்த்தையாடுவதில் ஈடுபடாது தியானத்தில் உட்கார்ந்து இருத்தல் அவசியம். ஆலயத்தினுள் நம்மை வீண் வார்த்தை பேசுவதற்குத் தூண்டுபவர்களும் ஆண்டவனால் ஏவப்பட்டவர்களே. இது இறைவன் நம்மைப் பரீட்சை செய்வதற்காக ஏற்படுத்தியதேயாம். எனவே இதனை வென்று மௌனத்தைக் கடைப்பிடித்தலே நமது வழிபாட்டின் குறிக்கோளாகும்.

இங்ஙனம் ஆலய வழிபாட்டினைத் தினமும் நியதியாக மேற்கொண்டு நமது அன்றாட அலுவல்களையும் கவனித்துக்கொள்வோமேயானால் நமது வாழ்வு தெய்வீக வாழ்க்கையாக அமையும். மேலும் தினந்தோறும் ஆலய வழிபாடு செய்ய இயலாவிடின் விசேட நாள்களிலும் புண்ணிய காலங்களிலுமாவது ஆசார சீலர்களாகச் சுவாமி தரிசனம் செய்பவர்களும் இறைவனது கருணைக்கு ஆளாவார்கள்.